## மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பு - தலைவர்கள், பதிப்பாளர்கள் வரவேற்பு




**சென்னை:** மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறக்கப்பட்டதற்கு, அரசியல் கட்சித் தலைவர்கள், புத்தகப் பதிப்பாளர்கள் உள்ளிட்டோர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது: சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் கு.செல்வப் பெருந்தகை: நாடுகளின் பெருமையும், சிறப்பும் அந்நாட்டு மக்களின் கல்வி அறிவில் தான் அமைந்துள்ளது. அத்தகு கல்வியறிவை வளர்ப்பதற்காக, முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி தினத்தில், உலகத்தரம் மிக்க, பிரம்மாண்டமான கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மதுரையில் திறந்து வைத்த முதல்வர் ஸ்டாலினுக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திக தலைவர் கி.வீரமணி:** அண்ணா நூற்றாண்டு நூலகத்தை, முன்னாள் முதல்வர் கருணாநிதி சென்னையில் சிறப்பாக அமைத்து, அண்ணாவுக்கு பெருமை சேர்த்தார். தற்போது அவரது மகன் முதல்வர் ஸ்டாலின், கல்வியின் தேவையை உணர்ந்து, மக்களுக்குப் பயன்தரும் வகையில் மதுரையில் நூலகம் அமைத்துள்ளது பாராட்டுக்குரியது.

அண்மையில் சென்னையில் பல்நோக்கு மருத்துவமனையைத் திறந்தது உடலைவளப்படுத்துவதற்காக. அதேபோல, மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்தது மக்களின் அறிவு வளத்தைப் பலப்படுத்துவதற்காக.

இந்திய பதிப்பாளர் மற்றும் படைப்பாளர் சங்கத் தலைவரும், பபாசி துணைத் தலைவருமான பெ.மயில வேலன், இந்திய பதிப்பாளர் மற்றும் படைப்பாளர் சங்கம் மற்றும் பபாசி இணைச் செயலாளர் மு.பழநி: முன்னாள் முதல்வர் கருணாநிதியின் கனவுத் திட்டமான புத்தகப் பூங்கா அமைக்க பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி.

திமுக ஆட்சிப் பொறுப்பேற்றதும் புத்தகங்களைப் பரிசளியுங்கள் என்று அறிவுறுத்தியது போற்றுதலுக்கு உரியது. அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சி நடத்தியது அரசின் உயரிய செயலாகும். தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளர் அம்ச வேணி பெரியண்ணன் எழுதிய நூல்களை நாட்டுடமையாக்கியது, பெண்ணிய எழுத்தாளர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்நிலையில், மதுரையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகம் அனைவருக்கும் மிகுந்த பயனளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அந்த நூலகத்துக்கு ரூ.40 கோடி மதிப்பிலான, 3.5 லட்சம் புத்தகங்களை வாங்கி, பதிப்பாளர்கள், எழுத்தாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த உதவிய முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் உதயநிதி, அன்பில் மகேஸ் பொய்யா மொழி ஆகியோருக்கு நன்றி. இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தானியங்கி வில்லங்க சான்று வசதிகளுடன் 'ஸ்டார் 3.0' திட்டம் அடுத்தாண்டு அமல்: பதிவுத் துறை அமைச்சர் மூர்த்தி தகவல்



**சென்னை**: வில்லங்க சான்றிதழை தானியங்கி முறையில் தயாரித்தல் உள்ளிட்ட நவீன அம்சங்களுடன் பதிவுத்துறையில் 'ஸ்டார் 3.0' திட்டம் அடுத்தாண்டு அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: முன்னாள் முதல்வர் கருணாநிதியால், பதிவுத் துறையில் முன்னோடி திட்டமாக கடந்த 2000-ம் ஆண்டு பிப்.6-ம் தேதி முதல் 'ஸ்டார்' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்திட்டம் பல்வேறு பரிணாம வளர்ச்சிகள் அடைந்து கணினிமயமாக்கலில் பதிவுத்துறையை முன்னோடி துறையாகத் திகழ வைத்துள்ளது. தற்போது அனைத்து சேவைகளும் இணையதள அமைப்பிலான 'ஸ்டார் 2.0' திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, பதிவுத்துறையில் கணினிமயமாக்கல் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதன் அடிப்படையில் தற்போதுள்ள 'ஸ்டார் 2.0' திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகளில், செயற்கை நுண்ணறிவு, மெஷின் லேர்னிங், பெருந்தரவு பகுப்பாய்வு முதலான மேம்படுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப உத்திகள் உட்புகுத்தப்படுகின்றன.

சான்றிட்ட நகல் மற்றும் வில்லங்க சான்றிதழ் முதலான சேவைகளை தானியங்கி முறையில் தன்னிச்சையாக தயாரித்தல் முதலான பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப திட்டங்களை செயல்படுத்தும் விதமாக ரூ.323.45

கோடி செலவில் 'ஸ்டார் 3.0' திட்டம் அடுத்தாண்டு முதல் அறிமுகப்படுத்துவது குறித்து, கடந்த ஜூலை 12-ல் தேதிஅரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை கண்காணிக்க தலைமை செயலரின் தலைமையில் மாநில அளவிலான குழுவும்,செயல்படுத்துவதற்காக பதிவுத்துறை தலைவர் தலைமையில் திட்டசெயலாக்க குழுவும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்துக்கென திட்ட ஒருங்கிணைப்பாளரை தேர்வுசெய்யவும் திட்ட ஆலோசகர்கள் இருவரை நியமிக்கவும், இத்திட்டத்தின் செயல்திறன், செயல்பாடு மற்றும் பாதுகாப்பு முதலானவற்றை தணிக்கை செய்ய மூன்றாம் தரப்பு தணிக்கையாளர்களை அடையாளம் காணவும் பதிவுத்துறை தலைவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முழுமையான வன்பொருள், மென்பொருள், பணியமைப்பு மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் அறிமுகப்படுத்தப்பட உள்ள 'ஸ்டார் 3.0' திட்டமானது, பதிவுக்கு வரும் பொதுமக்களுக்கு எளிய, வெளிப்படையான பாதுகாப்பான மற்றும் துரிதமான மற்றும் உயர் தரத்திலான சேவைகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**தஞ்சாவூர்: சாலை அகலப்படுத்தும் பணியின்போது கண்டெடுக்கப்பட்ட பழங்காலத்து யானை கற்சிலை**



**தஞ்சாவூர்**: திருவிடைமருதூர் வட்டம், திருபுவனத்தில் நடைபெற்று வரும் சாலை அகலப்படுத்தும் பணியின்போது மண்ணில் புதைந்திருந்த பழங்காலத்து யானை கற்சிலை கண்டெடுக்கப்பட்டது.

கும்பகோணம்-மயிலாடுதுறை சாலை அகலப்படுத்தும் பணி கடந்த சில மாதங்களாக நடைபெற்று வருகிறது. தற்போது இந்தப் பணி திருபுவனத்தில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அந்த பகுதியில் சாலையின் இடது புறத்தில் பொக்லைன் இயந்திரம் மூலம் மழை நீர் வடிகாலுக்காக பள்ளம் தோண்டியபோது, பாதி உடைந்த நிலையில் கலைநயத்துடன் அழகிய வேலைப்பாடுகளுடன் 2 அடி உயரத்தில், மூன்றரை அடி நீளமும், ஒன்றரை அடி அகலமும், சுமார் 50 கிலோ எடையும் கொண்ட யானை கற்சிலை கண்டெடுக்கப்பட்டது.

இது தொடர்பாகத் தகவலறிந்த திருவிடைமருதூர் வட்டாட்சியர் டி.சுசீலா மற்றும் திருவிடைமருதூர் போலீஸார், அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டனர். பின்னர், அந்தச் சிலையை வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்துள்ளனர். இந்தச் சிலை தொடர்பாக மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவின் பேரில் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வட்டாட்சியர் டி.சுசீலா தெரிவித்தார்.

**மும்பை மசகான் டாக்ஸ் நிறுவனத்தில் 3 ஸ்கார்ப்பீன் ரக நீர்மூழ்கி கப்பல் தயாரிக்க இந்தியா - பிரான்ஸ் ஒப்பந்தம்**



**புதுடெல்லி**: பிரான்ஸ் சென்ற இந்திய பிரதமர் மோடி, அந்நாட்டு தேசிய தினத்தில் கலந்து கொண்டார். இருதரப்பிலும் பல துறைகளில் கூட்டாக செயல்பட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அதன்பின் மும்பையில் மசகான்டாக்ஸ் நிறுவனத்தில் 3 ஸ்கார்ப்பீன் டீசல் - எலக்ட்ரிக் நீர்மூழ்கி கப்பல்களை தயாரிக்க இரு நாடுகள் இடைய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்திய கடற்படைக்கு ஏற்கனவே 6 ஸ்கார்ப்பீன் ரக நீர்மூழ்கி கப்பல்கள் பிரான்ஸுடன் இணைந்து ரூ.23,000

கோடி செலவில் மும்பை மசகான் டாக்ஸ் நிறுவனத்தில் கூட்டாக தயாரிக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக மேலும்3 நீர்மூழ்கி கப்பல்கள் தயாரிக்க தற்போது ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் நவீன போர்விமான இன்ஜின்களை கூட்டாக தயாரிக்கவும் இந்தியா-பிரான்ஸ்இடையே ஒப்பந்தம் கையெழுத் தாகியுள்ளாது.

கடற்படை பயன்பாட்டுக்காக 26 ரபேல் போர் விமானங்களை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இதுகுறித்து, பிரதமர் மோடி- அதிபர் இமானுவேல் மேக்ரான் வெளியிட்ட கூட்டறிக்கையில் எந்த தகவலும் இடம்பெறவில்லை. 'தி ஹாரிசோன் 2047' என்ற ஆவணத்தில் இந்தியாவும், பிரான்ஸூம் ஏரோநாட்டிகல் தொழில்நுட்பங்களில் கூட்டாக செயல்பட்டுபோர் விமான இன்ஜின்களை தயாரிப்போம் என தெரிவிக்கப்பட் டுள்ளது. இதற்கான திட்டத்தை ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனமும் (டிஆர்டிஓ) பிரான்ஸின் சஃப்ரான் நிறுவனமும் தயாரிக்கவுள்ளன.

98 கிலோ நியூட்டர் சக்தியுடன் ஜிஇ-414 விமான இன்ஜின் தயாரிப்பில் 80% தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கு அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது. இந்த ரக இன்ஜின்கள் இந்தியாவில் தயாரிக்கப்படும் தேஜஸ் மார்க்-2ரக விமானத்தில் பயன்படுத்தப்படவுள்ளன. ஆனால் இதைவிட சக்தி வாய்ந்த போர் இன்ஜின் தயாரிப்பில் 100% தொழில்நுட்ப பரிமாற்றத்துக்கு பிரான்ஸ் முன்வந்துள்ளது. இதன் மூலம் 110 கிலோநியூட்டன் திறனுள்ள போர் விமான இன்ஜின் பிரான்ஸின் சஃப்ரான் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கப்படும். இவை இந்தியா தயாரிக்கும் 5-ம் தலைமுறை போர் விமானத்தில் பயன்படுத்தப்படும். மேலும் பிரான்ஸின் சஃப்ரான் நிறுவனத்துடன் இணைந்து அதிக எடையை தூக்கி செல்லும் ஹெலிகாப்டர் இன்ஜின்கள் தயாரிக்கப்படும்.

## அசோக சக்கரம், இஸ்ரோ சின்னம்: நிலவில் இந்தியாவின் அடையாளத்தை நிறுவப் போகும் சந்திரயான்-3




நிலவுக்கு அனுப்பப்பட்டுள்ள சந்திரயான் -3 விண்கலம் அங்கு நிலவின் மேல்பரப்பில் இந்தியாவின் அடையாளத்தைப் பதிக்கவுள்ளது. விண்கலத்தின் ரோவர் பிரக்யானின் பின்பக்க கால்களில் தேசிய சின்னமான அசோக சக்கரம் மற்றும் இஸ்ரோவின் சின்னம் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. அவை நிலவில் இந்தியாவின் தடத்தை பதிக்கும்.

ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்-3 ராக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம் நேற்று (ஜூலை 15) மதியம் 2.35 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. புறப்பட்ட 16 நிமிடங்களில், திட்டமிட்ட புவி நீள்வட்ட சுற்றுப்பாதையில் விண்கலம் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. 41 நாள் பயணத்துக்கு பிறகு, ஆகஸ்ட் மாத இறுதியில் நிலவை சந்திரயான்-3 சென்றடைகிறது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ), நிலவை ஆய்வு செய்வதற்காக கடந்த 2008-ம் ஆண்டு சந்திரயான்-1 விண்கலத்தை அனுப்பியது. அது நிலவின் தரைப்பகுதியில் இருந்து 100 கி.மீ. உயரத்தில்

நிலவை சுற்றி வந்து 312 நாட்கள் ஆய்வு செய்தது. அப்போது, நிலவின் மேற்பரப்பில் பனிக்கட்டி வடிவில் நீர் இருப்பதை உறுதிப்படுத்தியது.

அதைத் தொடர்ந்து, நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்யும் நோக்கில் சந்திரயான்-2 திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ கடந்த 2008-ம் ஆண்டு முடிவு செய்தது. சந்திரயான்-2 விண்கலம் 2019 செப்டம்பர் மாதம் நிலவின் சுற்றுப்பாதையை அடைந்தது. எனினும், தொழில்நுட்பக் கோளாறால், திட்டமிட்டபடி லேண்டர் கலன் தரையிறங்காமல் நிலவில் மோதி செயலிழந்தது. இந்நிலையில், நிலவுக்கு சந்திரயான் -3 விண்கலம் அனுப்பப்பட்டுள்ளது. அது அங்கு நிலவின் மேல்பரப்பில் இந்தியாவின் அடையாளத்தைப் பதிக்கவுள்ளது

**அமெரிக்க பாட்மிண்டன் - லக் ஷயா சென் வெற்றி**



**கவுன்சில் பிளஃப்ஸ்:** அமெரிக்க ஓபன் பாட்மிண்டன் தொடரில் ஆடவர் ஒற்றையர் அரை இறுதிச் சுற்றுக்கு இந்திய வீரர் லக் ஷயா சென் முன்னேறியுள்ளார்.

அமெரிக்காவின் கவுன்சில் பிளஃப்ஸ் நகரில் நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் கால்இறுதியில், லக் ஷயா சென்21-10, 21-17 என்ற நேர் செட் கணக்கில் சக நாட்டு வீரரான சங்கர் முத்துசாமியை வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

அதே நேரத்தில் மகளிர் பிரிவு கால் இறுதியில், பி.வி. சிந்துவை சீனாவின் காவ் பாங் ஜி 22-20, 21-13 என்ற கணக்கில் வீழ்த்தினார்.

## வங்கதேசத்தில் சென்னை நிறுவனம் சார்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை - அடிக்கல் நாட்டினார் பிரதமர் ஹசீனா



**சென்னை**: வங்கதேசத்தில் 200 எம்எல்டி பாக்லா எனர்ஜி நியூட்ரல் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை அமைப்பதற்கான ஒப்பந்தத்தை சென்னையைச் சேர்ந்த வி ஏ டெக் வபாக் நிறுவனம் பெற்றுள்ளது.

தலைநகர் டாக்காவில் உள்ள பங்கபந்து சர்வதேச மாநாட்டு மையத்தில் 13-ம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்நாட்டு பிரதமர் ஷேக் ஹசீனா இந்த திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் அந்நாட்டு அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், வி ஏ டெக் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ராஜீவ் மிட்டல், உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

டாக்கா தண்ணீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றல் ஆணையம், சுமார் ரூ.820 கோடி மதிப்பிலான இந்த ஒப்பந்தத்தை கடந்த மார்ச் மாதம் வி ஏ டெக் நிறுவனத்துக்கு வழங்கியது. இந்த ஒப்பந்தத்தின்படி, இந்த திட்டத்தை கட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை இந்நிறுவனம் மேற்கொள்ளும். டாக்கா சானிட்டேஷன் வளர்ச்சி திட்டத்தின் கீழ், உலக வங்கியும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியும் இந்த திட்டத்துக்கான நிதியுதவியை வழங்கும்.

இதுகுறித்து வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா கூறும்போது, “பருவநிலை மாற்ற பிரச்சினைக்கான தீர்வை ஊக்குவிப்பதில் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் வங்கதேசம் முன்னிலையில் உள்ளது என்பதை இந்த திட்டம் உறுதிப்படுத்தும்” என்றார்.

**பிரான்ஸ் அரசு சார்பில் இந்திய தேசியக் கொடியின் மூவர்ணங்களில் பிரதமர் மோடிக்கு சைவ விருந்து**



பிரான்ஸ் அதிபர் மேக்ரானுக்கு பிரதமர் மோடி சந்தன மரத்தால் செய்யப்பட்ட சித்தார் இசைக் கருவியை பரிசாக வழங்கினார். படம்:பிடிஐ

**பாரிஸ்**: பிரான்ஸ் சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு இந்திய தேசியக் கொடி யின் மூவர்ணங்களில் சைவ விருந்து அளிக்கப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த13, 14-ம் தேதிகளில் பிரான்ஸில் அரசு முறை பயணம் மேற்கொண் டார். அந்த நாட்டின் தலைநகர் பாரிஸில் நேற்று முன்தினம் நடை பெற்ற தேசிய தின விழாவில் அவர் பங்கேற்றார். அன்றிரவு

பாரிஸில் அமைந்துள்ள லூவர் அருங்காட்சியகத்தில் பிரான்ஸ் அரசு சார்பில் பிரதமர் நரேந்திர மோடிக்கு இரவு விருந்து அளிக்கப்பட்டது.

பிரான்ஸின் மிக பழமையான இந்த அருங்காட்சியகத்தில் உலகின் மிக முக்கிய தலைவர் களுக்கு மட்டுமே அரசு சார்பில் விருந்து அளிக்கப்படும்.கடந்த 1953-ம் ஆண்டில் அப்போதைய இங்கிலாந்து ராணி எலிசபெத்துக்கு அங்கு விருந்து வழங்கப்பட்டது. அதன் பிறகு தற்போது பிரதமர் மோடிக்கு அங்கு சிறப்பு விருந்து அளிக்கப்பட்டது. பொதுவாக லூவர் அருங்காட்சியக விருந்தின்போது பிரான்ஸ் தேசிய கொடியின் வர்ணங்களில் உணவு வகைகள் இடம்பெறுவது வழக்கம். இந்த முறையை மாற்றி பிரதமர் மோடிக்காக இந்திய தேசிய கொடியின் வர்ணங்களில் சைவ உணவு வகைகள் பரிமாறப்பட்டன.

**சந்தன சித்தார் பரிசு:** பிரான்ஸ் பயணத்தின்போது அந்த நாட்டு அதிபர் இமானுவேல் மேக்ரானுக்கு பிரதமர் நரேந்திர மோடி, சந்தன மரத்தால் செய்யப்பட்ட சித்தார் இசைக் கருவியை பரிசாக வழங்கினார். இந்த சித்தாரில் சரஸ்வதி தேவி, விநாயகர், இந்திய தேசிய பறவையான மயில் உருவங்கள் பொறிக்கப்பட்டு உள்ளன. பிரான்ஸ் அதிபரின் மனைவி பிரிஜெட் மேக்ரானுக்கு போச்சம்பள்ளி ஜகாட் பட்டுப் புடவையை பிரதமர் மோடி பரிசாக அளித்தார். இது தெலங்கானாவின் பிரசித்தி பெற்ற கைத்தறி பட்டுப் புடவை ஆகும்.

பிரான்ஸ் பிரதமர் எலிசபெத் போர்னுக்கு ராஜஸ்தானின் மார்பிள் கற்களால் தயாரிக்கப்பட்ட டைனிங் பிளேட்டுகளை பிரதமர் மோடி பரிசாக அளித்தார்.

**பிரான்ஸின் உயரிய விருது பெற்றது இந்தியாவுக்கு கவுரவம்: பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்**



பிரான்ஸின் எலிசி அரண்மனையில் பிரதமர் மோடிக்கு 'கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர் ' விருதை அளித்த பின் அவரை அழைத்து வருகிறார் அதிபர் இம்மானுவேல் மேக்ரான்.

**புதுடெல்லி:** பிரான்ஸ் நாட்டின் மிக உயர்ந்த 'தி கிரான்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர்' விருது அளிக்கப்பட்டதை பணிவுடன் ஏற்கிறேன். இது இந்தியாவுக்கும், 140 கோடி இந்திய மக்களுக்கும் அளிக்கப்பட்ட கவுரவம்' என பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் தேசிய தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் அழைப்பு விடுத்தார். இதை ஏற்று நேற்று முன்தினம் பிரான்ஸ் சென்ற பிரதமர் மோடியை விமான நிலையத்தில் அந்நாட்டு பிரதமர் எலிசபெத் போர்ன் வரவேற்றார்.

அதன்பின் தலைநகர் பாரீஸில் இந்தியர்களை சந்தித்து பிரதமர் மோடி பேசினார். பல துறைகளில் இந்தியா அடைந்துள்ள வளர்ச்சியை எடுத்து கூறிய மோடி, இந்தியாவில் முதலீடு செய்ய பிரான்ஸில் உள்ள இந்தியர்கள் முன்வர வேண்டும் என அழைப்புவிடுத்தார்.

அதன்பின் பிரான்ஸ் பிரதமர் எலிசபெத் போர்னுடன் பொருளாதாரம், வர்த்தகம், எரிசக்தி, சுற்றுச்சூழல், போக்குவரத்து, கல்வி, டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் மக்கள் தொடர்பு போன்ற துறைகளில் இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயல்படுவது குறித்து பிரதமர் மோடி ஆலோசனை

நடத்தினார். பிரான்ஸ் செனட் தலைவர் ஜெரார்ட் லார்ச்சரையும் பிரதமர் மோடி சந்தித்து பேசினார்.

**இரவு விருந்து:** பிரதமர் மோடிக்கு அதிபரின் எலிசி அரண்மனையில் நேற்று முன்தினம் இரவு விருந்து அளிக்கப்பட்டது. அவரை அதிபர் இம்மானுவேல் மேக்ரானும் அவரது மனைவியும் வரவேற்றனர். இந்த விருந்து நிகழ்ச்சியில், பிரான்ஸ் நாட்டின் மிக உயரிய விருதான 'கிராண்ட் கிராஸ் ஆஃப் தி லீஜியன் ஆஃப் ஹானர்' விருதை பிரதமர் மோடிக்கு அதிபர் இம்மானுவேல் மேக்ரான் வழங்கினார். இந்த விருதை பெறும்முதல் இந்திய பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விருது வழங்கப்பட்டது குறித்து ட்விட்டரில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது: 'கிராண்ட் கிராஸ் ஆஃப் திலீஜியன் ஆஃப் ஹானர்' விருதை மிகவும் பணிவுடன் ஏற்றுக் கொள்கிறேன். இது இந்திய மக்கள் 140 கோடி பேருக்கு அளிக்கப்பட்ட கவுரவம். இதற்காக அதிபர் இம்மானுவேல் மேக்ரானுக்கும், பிரான்ஸ் அரசுக்கும் மற்றும் மக்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இது, இந்தியா மீது பிரான்ஸ் வைத்துள்ள ஆழமான அன்பையும், நமது நாட்டுடனான நட்புறவை மேலும் வலுப்படுத்த பிரான்ஸ் உறுதியாக உள்ளதையும் தெரிவிக்கிறது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**இந்தியில் வரவேற்பு:** இந்தியா, பிரான்ஸ் இடையே தூதரக அளவில் நட்புறவு ஏற்பட்டு 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்நிலையில் அந்நாட்டு தேசிய தினத்தில் பங்கேற்க பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றுள்ளார். இது குறித்து ட்விட்டரில் இந்தியில் தகவல் தெரிவித்துள்ள பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், "இந்தியாவும், பிரான்ஸும் 25 ஆண்டு கால நட்புறவையும், நம்பிக்கையையும் கொண்டாடுகின்றன. இது வலுவடைந்து கொண்டு வருகிறது. பாரீஸ் நகருக்கு நரேந்திர மோடியை வரவேற்கிறேன்" என குறிப்பிட்டிருந்தார்.

**3 ரஃபேல் போர் விமானம்:** பிரான்ஸ் நாட்டின் தேசிய தினத்தை முன்னிட்டு 6,300 வீரர்கள் பங்கேற்கும் பிரம்மாண்ட ராணுவ அணிவகுப்பும் நடைபெறுகிறது. இதில் இந்தியாவின் முப்படை வீரர்களும் பங்கேற்று அணிவகுத்து சென்றனர். இந்திய ராணுவத்தின் சார்பில் பஞ்சாப் படைப்பிரிவு அணி வகுப்பில் பங்கேற்றது. முதல் உலக போரின் போது கடந்த 1915-ம் ஆண்டு செப்டம்பர் பிரான்ஸில் நியூவே சப்பேலி என்ற இடத்தில் நடந்த போரில் பஞ்சாப் படைப்பிரிவு பங்கேற்றது. இதை நினைவு கூரும் வகையில், பிரான்ஸ் நாட்டின் தேசிய தின அணிவகுப்பில் பஞ்சாப் படைப்பிரிவு

பங்கேற்றது. இந்திய விமானப்படையின் 3 ரஃபேல் போர் விமானங்களும், பிரான்ஸ் விமானப்படையுடன் இணைந்து சாகசத்தில் ஈடுபட்டன.

**விரைவில் இந்தியன் யுபிஐ:** பிரான்ஸில் இந்திய மக்களிடம் நேற்று முன்தினம் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, ''பிரான்ஸில் இந்தியாவின் யுபிஐயை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளது. இது ஈஃபிள் கோபுரத்தில் இருந்து தொடங்கப்படும். விரைவில் இந்திய சுற்றுலா பயணிகள் யுபிஐ மூலம் ரூபாயில் பணம் செலுத்த முடியும்'' என்றார்.

யுபிஐ மற்றும் சிங்கப்பூரின் பேநவ் ஆகியவை இதுபோன்ற ஒப்பந்தத்தை ஏற்கனவே செய்துள்ளன. இதன் மூலம் இரு நாட்டு மக்கள் யுபிஐ மூலம் இரு நாடுகளிலும் பணம் செலுத்திக் கொள்ளலாம். ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பூட்டான் மற்றும் நேபாளம் ஆகியவை யுபிஐ மூலம் பணம் செலுத்தும் முறையை ஏற்கெனவே பின்பற்றுகின்றன.

யுபிஐ சேவைகளை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், மேற்கத்திய நாடுகள் மற்றும் ஆசிய நாடுகளில் விரிவுபடுத்துவதற்கான பேச்சுவார்த்தையில் என்பிசிஐ (நேஷனல் பேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா) இன்டர்நேஷனல் ஈடுபட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY